2019 ஜனவரி 7]

அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

28—

சமுதாயக் கூடம்

***12060—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, குமராட்சி ஒன்றியம், கூடுவெளிச்சாவடியில் ஆதி திராவிடர் நலத் துறைக்குச் சொந்தமான இடத்தில் சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

எனக்கு தாயாய், தந்தையாய், ஆசானாய், தெய்வமாய் விளங்கிய தாயின் திருவடியை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, குமராட்சி ஒன்றியத்தில் கூடுவெளிச்சாவடியில் வசிக்கும் ஆதி திராவிட மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்டுவது குறித்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, மக்கள்தொகை, போதுமான இடம் மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை

செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என வள்ளுவம் பிறந்த வண்ணத் தமிழ்நாட்டில்,

"ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர் உதையப்பர்
ஆகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி ஒப்பப்பர்
ஆய்விடுவார்"

என்கின்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய வரிகளுக்கு இலக்கணமாக வீழ்ந்துகிடக்கின்ற, அடித்தட்டிலே இருக்கின்ற ஒடுக்கப்பட்ட மக்களை பொதுத் தொகுதிகளில் நிறுத்தி, வெற்றிபெற வைத்து அரசியலிலும் புரட்சி, ஆட்சியிலும் புரட்சி செய்து, நமக்கெல்லாம் புரட்சித் தலைவியாக விளங்கிய ஒப்பற்றத் தலைவி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்னடிகளை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அடியொற்றி மிகச் சிறப்பான ஆட்சியைத் தமிழகத்தில் நடத்தி வருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியிலே கூடுவெளிச்சாவடியில், 2006 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 8 ஆம் தேதி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் நலனுக்காக தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு, 46½ ஏக்கர் நிலத்தை தெய்வத்திரு சிவ முத்துக்குமரப் பிள்ளை அவர்கள் தானமாகத் தந்திருக்கிறார்கள். இது பிரதான சாலையில் இருக்கக்கூடிய ஒரு பகுதி. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உயர் கல்வித் துறை

2019 ஜனவரி 7]

அமைச்சர் அவர்களும் அறிவித்த அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியைக் கட்டுவதற்கான இடத்தை அந்தப் பகுதியிலே தேர்வு செய்திருக்கிறார்கள். கல்லூரிக்கான இடம்போக, 43.83 ஏக்கர் நிலம் அங்கேயிருக்கிறது.

மக்கள் தொகை அதிகம் இருக்கிறது, பிரதான சாலைகள் அங்கு இருக்கின்றன. கூடுவெளிச்சாவடி, குடியாளம், துறைப்பாடி, வடமூர், தெம்மூர், முகையூர் போன்ற பகுதிகளில் இருக்கக்கூடிய மக்களின் நலன் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து, இவ்வாண்டிலேயே அங்கு சமுதாய நலக் கூடம் கட்டுவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 7 ஆண்டுகளில் 50 சமுதாய நலக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. 2018–2019 ஆம் ஆண்டில் 10 நவீன சமுதாய நலக் கூடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், தற்போதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை துறை அலுவலர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, ஆவணங்களின் அடிப்படையில், மாண்புமிகு முதல்வரின் மேலான பார்வைக்குக் கொண்டு சென்று, தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவில் தொகுதியில் இருக்கக்கூடிய காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியில் உள்ள அரசு ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. அந்த விடுதிக்குப் புதிய கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் காட்டுமன்னார்கோவில் தொகுதிக்கு*

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை வழங்கி, இன்றோடு 3 ஆண்டுகள் வெற்றிகரமாக அது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அக்கல்லூரியில் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சிறுபான்மையின மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கின்றனர். அந்த ஏழை, எளிய மாணவர்களின் நலன் கருதி, ஆதி திராவிடர் நலத் துறையின்மூலம் மாணவர் மற்றும் மாணவியர் விடுதி ஒன்றை கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா மற்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்மீது கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

29—

திருக்கோயில் திருப்பணி

***5558—திரு. சி. சந்திரசேகரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, சேந்தமங்கலம் அருள்மிகு ஸ்ரீலஷ்மி நாராயணப் பெருமாள் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் ஆகியோரையும் வணங்குகிறேன்.*